Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.799/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.பாலசுப்பிரமணியன்** | Occupation | தலைமை காவலர் |
| Father's name | நடராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

13.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 18.10.2024 அன்று நானும் தலைமை காவலர் எட்வின்ராஜா மற்றும் சார்பு ஆய்வாளர் ரகுபதி ஆகியோர் எங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்து வந்தபோது பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR Bulk பின்புறத்தில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர்போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சி செய்தவரை தடுத்து நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த உப்பு சாக்கை பார்த்தபோது அதில் 180 எம்எல் அளவுகொண்ட Oldchef Brandy 24 பாட்டில்களும், One man army XXX Rum 10 பாட்டில்களும், Old chef strong rum பாட்டில் ஒன்றும்அரசு மதுபானக்கடையிலிருந்து வாங்கி அதிக லாபத்திற்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார். எதிரி தானாக மேற்படி மதுபான பாட்டில்களை எங்களிடம் கொடுத்தார். எதிரி மற்றும் சொத்தை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியில் கையெழுத்து செய்ய சம்பவயிடம் அருகேயிருந்த நபர்கள் யாரும் முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளாகிய நானும் தலைமை காவலர் எட்வின்ராஜாவும் சாட்சிகளாக

கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவயிடமானது எங்கள் காவல்நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியை நான் தான் எழுதினேன். அத்தாட்சியில் எதிரியிடமிருந்து சார்பு ஆய்வாளர் கையெழுத்து பெற்றார். மேற்படி சம்பவயிடத்தில் எதிரி மதுபானம் விற்றதாக புகார் எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. உண்மையில் எதிரி சட்டவிரோதமாக மதுபானம் விற்றிருந்தால் மேற்படி பெட்ரோல் பல்க்கிலிருந்தவர்களே புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் சம்பவயிடத்திலிருந்த 2 நபர்களை விசாரித்து கையெழுத்து செய்ய வருமாறு கேட்டோம். ஆனால் அவர்கள் முன்வரவில்லை. சம்பவயிடத்திற்கு நாங்கள் சுமார் 10.30 முதல் 10.45 மணியளவில் சென்றோம். சம்பவயிடத்தில் நாங்கள் 1 1/2 மணிநேரம் இருந்தோம். பின்னர் 02.00 மணிக்கு காவல்நிலையம் வந்தோம். பின்னர் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அத்தாட்சியில் நான் கையெழுத்து மட்டும் தான் செய்தேன் என்றாலும் மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். எதிரியை காவல்நிலையத்தில் விட்டுவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். போலீசார்என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் கூறியவாறு சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சார்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அத்தாட்சியில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டதா என்பது எனக்கு தெரியாது என்பதால் இவ்வழக்கில் அத்தாட்சியில் கையெழுத்து செய்ததாக கூறப்படும் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரிதான். எதிரி எந்தவித குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் அவரிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.799/2025

**Depositions of PW- 2**

| Name | **திரு.எட்வின்ராஜா** | Occupation | தலைமை காவலர் |
|---|---|---|---|
| Father's name | ராமர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026.

13.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 18.10.2024 அன்று சார்பு ஆய்வாளர் ரகுபதி, தலைமை காவலர் 1530 பாலசுப்பிரமணியன் மற்றும் நானும் மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து செய்துவந்தபோது பூவநாதபுரம் விலக்கு அருகில் ESSAR Bulk பின்புறம் ரோந்து செய்தபோது பின்னார் விசாரித்து தெரிந்து கொண்ட ரெங்கபாளையம் தெற்கு தெரு சுப்பிரமணி மகன் பாலமுருகன் என்பவர் ஒரு சாக்கு பையில் பாட்டில்களுடன் நின்றுகொண்டிருந்தார். சார்பு ஆய்வாளர் அவரை விசாரித்தபோது சட்டத்திற்கு புறம்பாக மதுபான பாட்டில்கள் வைத்திருந்ததால் மதுபான பாட்டில்களையும் எதிரியையும் காவல்நிலையம் அழைத்து வந்தோம். மேற்படி மதுபான பாட்டில்கள் Old chef 24 Bottle, One man army 10 Bottle, Old chef strong 1 Bottle ம் காவல்நிலையம் எடுத்து வந்தோம். அங்கு வைத்து அத்தாட்சி தயார் செய்து காவல்நிலையம் எடுத்து வந்தோம். பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்து அத்தாட்சியில் கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவயிடத்திற்கு காலை 09.00 மணியளவில் சென்றோம். சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார்செய்தோம் என்றால் சார்பு ஆய்வாளர் தான் தயார் செய்தார். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் சார்பு ஆய்வாளருக்கு தான் அதுபற்றி தெரியும். சம்பவயிடமானது எங்கள் காவல்நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நாங்கள் 1 மணிநேரம் இருந்தோம். எதிரியிடம் யாரும் மதுபானம் வாங்கியதாகவோ அல்லது எதிரி யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ தகவல் எதுவும் கிடைக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் பணம் எதுவும்கைப்பற்றப்பட்டதா என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அத்தாட்சியை சார்பு ஆய்வாளர் தயார்செய்தார். நான் அத்தாட்சியில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் என்ன எழுதியிருந்தது என்பதுபற்றி எனக்கு தெரியும் அத்தாட்சியில் ஆஜர்எதிரி கையெழுத்து செய்தாரா என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். எதிரி கைது செய்ததற்கான ஆவணம் தயார் செய்யப்பட்டதா என்றால் அத்தாட்சி மட்டும் தயார்செய்யப்பட்டது.

எதிரியை சோதனை செய்வதற்கு முன் சோதனை சம்மத கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். மேற்படி உப்பு தாளை கைப்பற்றினோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். எதிரியை காவல்நிலையம் அழைத்து சென்ற பின்பு என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னை 18.10.2024 அன்று விசாரித்து சார்பு ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவயிடத்தில் எத்தனை தனி நபர்களை விசாரித்தோம் என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அத்தாட்சியில் கையெழுத்து மட்டும் கேட்டதால் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன்.

மேற்படி பெட்ரோல் பல்க்கின் உரிமையாளர் சார்பு ஆய்வாளரிடம் எதிரி மீது புகார் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் என்னை சாட்சியாக சார்பு ஆய்வாளர் தான் சேர்த்தார் என்றால் சரிதான். மேற்படி நான் கூறியவாறு

**சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அத்தாட்சியில் நான் காவல்நிலையததில் வைத்து கையெழுத்து செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும்எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து மதுபான பாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கானது புள்ளிவிவரத்திற்காக எதிரி மீது போடப்பட்டுள்ளது என்றாலும் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் பதிவு செய்ததால் எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.